**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC.218/2023
Sessions)

( Prosecution P.W.8
Deposition of witness for (Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | விக்னேஷ்வரன் | -- | |
| Father's Name | மாரிமுத்து | Calling | பழைய இரும்பு வியாபாரம் |
| Village | இராஜபாளையம் | Religion | |
| Taluk | இராஜபாளையம் | Age | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of November 2025.

**A2, A6, A7, A10,A13, A14 present. Others absent.**

**முதல் விசாரணை**

நான் இராஜபாளையம் தெற்குமலையடிப்பட்டி சௌந்திரபாண்டியன் நகரில் குடியிருந்து வருகிறேன், பழைய இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். 24.09.2022ம் தேதி இரவு 09.45 மணியளவில் நானும், எனக்குத் தெரிந்த சின்னத்தம்பி என்பவரும் இராஜபாளையத்தில் உள்ள பாம்பே ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியில் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த இராஜபாளையம் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் எங்களை அழைத்து வழக்கு விசயமாக போஸ்ட் லைட் வெளிச்சத்தில் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார். அந்த வகைக்கு நானும், சின்னத்தம்பியும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். தற்போது நான் பார்வையிடும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது. பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். அதன் பிறகு இரவு சுமார் 10.50 மணியளவில் 6,7 கற்களையும் கைப்பற்றினார்கள். அந்த வகைக்கும் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பாம்பே லாட்ஜ் என்பது இராஜபாளையம் பழைய பேருந்துநிலையம் அருகில் உள்ளது. பாம்பே லாட்ஜ்லிருந்து எனது ஊருக்கு சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். என்னுடைய இரும்புக்கடை பஞ்சுமார்க்கெட் அருகில் உள்ளது. நானும், சின்னத்தம்பியும் என்ன காரணத்திற்காக பாம்பே லாட்ஜ் அருகே வந்தோம் என்று போலிசார் விசாரிக்கும் போது சொன்னேன். நான் அந்த இடத்திற்கே

வரவில்லை என்றும், அதனால் தான் போலிசாரின் விசாரணையில் அது பற்றி சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பாம்பே லாட்ஜ் அருகில் சிசிடிவி கேமரா உள்ளது அதன் பதிவுகளை வாங்கிப் பார்த்தால் நான் அன்றைய தினம் அங்கு இருந்தேனா என்று தெரியவரும். என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள எனது கையெழுத்திற்கும், பார்வை மகஜரில் உள்ள கையெழுத்திற்கும் சற்று வித்தியாசம் உள்ளது. அத்தாட்சியில் நேரம் இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல பார்வை மகஜரிலும் நேரம் இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாம்பே லாட்ஜ் அருகில் மகஜர் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து செய்தேன். நான் இராஜபாளையம் நகரின் மையப்பகுதியில் பழைய இரும்புக்கடை வைத்துள்ளதால் காவல் துறையினரின் தயவு வேண்டும் என்பதால் அவர்கள் சொல்லிக்கொடுத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான், பல வழக்குகளில் காவல் துறையினருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல சொன்ன இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், எந்த அத்தாட்சியும் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**